## காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)(பொ) அவர்களின் செயல்முறைகள்

## முன்னிலை.-திரு.க.ரவிச்சந்திரன்

ந.க.4904/2022/அ4

நாள்.-18.03.2022

பொருள். பொதுப்பணி - தமிழ்நாடு அமைச்சுப்பணி - காஞ்சிபுரம் மாவட்ட வருவாய் அலகு - இளநிலை உதவியாளர் பணியமைப்பு - நேரடி நியமனத்திற்குட்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப்பணி தேர்வு தொகுதி - IV 2018-19 மற்றும் 2019-2020 ஆண்டிற்கான காலியிடம் நிரப்பப்பட்டது - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்கள் பணியிடம் ஒதுக்கீடு வரப்பெற்றது - பணிநியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்து - உத்திரவிடல் தொடர்பாக.

பார்வை.
1. அரசாணை எண். 191 பொதுத்துறை, நாள். 01.02.1962.
2. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3 அவர்களின் கடிதம் எண்.2513/PSD-I /2020 நாள்.-26.05.2020
3. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்களின் செயல்முறைகள் ந.க.அ4/10971/2020/ நாள்.-16.10.2020
4. பணியாளர்களின் பணிப்பதிவேடு.
5. வருவாய் கோட்ட அலுவலர் திருப்பெரும்புதூர் அவர்களின் கடித எண்.18/2022/அ4/நாள்.-02.03.2022
6. தனிவட்டாட்சியர் (ஆதிந) காஞ்சிபுரம் அவர்களின் கடித ந.க.எண்51/2021/அ1/நாள்.-22.02.2022

ஆணை.-

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நடைபெற்ற 2015-16, 2016-17 மற்றும் 2017-18ம் ஆண்டிற்குரிய காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனத்திற்குட்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப்பணி தேர்வு தொகுதி-IVற்கான தேர்வின் மூலம் இளநிலை உதவியாளர்களாக தேர்வு செய்யப்பட்டு பார்வை-2ல் காணும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3 அவர்களின் கடிதத்தின்படி காஞ்சிபுரம் மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டனர். பார்வை-3ல் காணும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்களின் செயல்முறைகளின்படி பணிநியமனம் வழங்கப்பட்டு, காஞ்சிபுரம் மாவட்ட வருவாய் அலகில் பணிப்புரியும் கீழ்கண்ட இளநிலை வருவாய் ஆய்வாளர்களின் பணியினை அவர்களது பெயர்களுக்கு எதிராக குறிப்பிட்டுள்ள பணியில் சேர்ந்த நாள் முதல் பார்வை-1ல் காணும் அரசாணையின்படி பணி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

Scanned with CamScanner

| வ. எண் | திருவாளர்கள் பெயர் மற்றும் பணிப்புரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1. | திருமதி.சி.பிரியங்கா<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வருவாய் கோட்ட அலுவலகம்,<br>திருப்பெரும்புதூர்.<br>.............மாற்றுப்பணியில் தனிவட்டாட்சியர்(ச.பா.தி)<br>திருப்பெரும்புதூர். | 19.10.2020<br>மு.ப | 19.10.2020<br>மு.ப |
| 2. | செல்வி.சே.ஷர்மிளா<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்<br>தனிவட்டாட்சியர் (ஆதிந) அலுவலகம்<br>காஞ்சிபுரம். | 19.10.2020<br>மு.ப | 19.10.2020<br>மு.ப |

" இந்த பணிவரன்முறை ஆணை, 2018-19, மற்றும் 2019-20-ம் ஆண்டிற்குரிய காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனத்திற்குட்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப்பணி தேர்வு தொகுதி-IV தேர்வு குறித்து சென்னை மற்றும் மதுரை உயர்நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள நீதிமன்ற வழக்குகளின் இறுதி ஆணைக்கு உட்பட்டது ஆகும் "

இவ்வாணை சம்மந்தப்பட்ட பணியாளர்களின் முதுநிலைக்குட்பட்டதல்ல.

தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை சிறப்பு விதிகளில், விதி 23(a)(i)ன் படி பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தனியர்களின் தகுதிகாண் பருவம் தொடங்கப்பட்டது எனவும் ஆணையிடப்படுகிறது.

தனியர்களின் பணிப் பதிவேட்டில் பணிவரன்முறை தொடர்பான பதிவுகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/-க.ரவிச்சந்திரன்
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது)(பொ)
காஞ்சிபுரம்.

(1/6)

// உத்திரவின் படி //

18/3/22
அலுவலக மேலாளர் (பொது)

பெறுநர்
சம்மந்தப்பட்ட நபர்கள்

18/3/2022

நகல் - வருவாய் கோட்ட அலுவலர் - திருப்பெரும்புதூர்
நகல் - தனிவட்டாட்சியர் (ச.பா.தி) - திருப்பெரும்புதூர்.
நகல் - தனிவட்டாட்சியர் (ஆதிந) - காஞ்சிபுரம்
நகல் - அலுவலக மேலாளர் (பொது) மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம்.
நகல் - மாவட்ட ஆட்சித் தலைவரின் முகாம் அலுவலகம் - காஞ்சிபுரம்.
நகல் - மாவட்ட வருவாய் அலுவலரின் முகாம் அலுவலகம் - காஞ்சிபுரம்.

Scanned with CamScanner